விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 253 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 12 புதன்கிழமை (28.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### ராமன்ய மகா பீடத்துக்கு

## வடக்குக் கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி விளக்கம்



(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் முன்னெடுக்கவுள்ள அபிவிருத்தி தொடர்பில் ராமன்ய மகா பீடத்துக்கு 15

## நடைபெறவுள்ள தேர்தல் புதிய உத்வேகம் அளிக்கும்

### பிரதமரிடம் ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருகின்ற இலங்கைக்கு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் புதிய உத்வேகத்தை அளிக்கும் 15



### மனித உரிமைகளைப் பாதுகாப்பதாக

# முன்னேற்றம் காண்பிக்க இலங்கை போலி முயற்சி

### மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு

(கொழும்பு)

**மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளோம் என சர்வதேசத்துக்குக் காண்பிக்க இலங்கை போலி முயற்சி செய்வதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.**

UNHRC

இலங்கையின் அடிப்படைச் சுதந்திரத்திற்கு மேலும் அச்சுறுத்தல்கள் உள்ளதாக ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் இலங்கையில் வறுமை இரண்டு மடங்காக அதி 02

### யாழ்.அச்சுவேலியில்

## தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த துவாரகன் நிருத்திகா (வயது-30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 15

## வான் மோதியதில் இளைஞன் உயிரிழப்பு

(கரணவாய்)

வான் மோதியதில் துவிச்சக்கரவண்டியில் சென்ற இளைஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

புற்றளை, புலோலி தெற்கைச் சேர்ந்த இராசையா யோகராஜா (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 21ஆம் திகதி இரவு புலோலி, கிராமக் கோட்டுச் சந்திப் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற குறித்த நபரை வான் 15

## கிளிநொச்சியில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 15

## எமது பயணத்தில் பிரதான இலக்கு தேசிய ஒற்றுமையே - சஜித்

(மட்டக்களப்பு)

எமது பயணத்தில் தேசிய ஒற்றுமையே பிரதான இலக்காகும். இன, மத, குல, கட்சி பேதங்களைக் கடந்து தேசிய கொள்கைத் திட்டத்துடன் முன்னோக்கிச் செல்வோம் என்று ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். 15



## கனடாவுக்கு இனி செல்ல முடியாது

8ஆம் பக்கம் பார்க்க

## 8 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைதாகி மறியல்

6ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் வீதி விபத்து

### மூவர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் பகுதியில் பட்டாரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் மாவட்டப் பொது வைத்திய 15

### கைதடியில் மனைவி இறந்ததை

## தாங்கிக் கொள்ளாத கணவன் உயிர்மாய்ப்பு

(கரணவாய்)

மனைவி இறந்ததை தாங்கிக் கொள்ளாத கணவன் விபரீத முடிவெடுத்து உயிரை மாய்த்த சம்பவம் ஒன்று கைதடி நாவற் குழியில் உள்ள ஐந்தாம் வீட்டுத் திட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்னர் மனைவி இறந்த நிலையில் தனிமையில் வசித்து வந்த மனுவேல்சூசைமுத்து (வயது-72) என்பவரே உயிரிழந்தவராவார். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம் வல்வெட்டித்துறை

**பிராமண குருமார் தேவை**

மேற்படி ஆலயத்திற்கு நித்திய, நைமித்திய கிரியைகள் செய்யக் கூடிய குருமார் இருவரும் உதவி அர்ச்சகர், பரிசாதகர் (மடப்பள்ளி) வேலையாட்கள் தேவை.
விருப்பமுடையோர் 10 நாட்களுக்குள் காலை 8 மணிமுதல் 12 மணி வரை நேரில் சந்திக்கவும்.
பிற விடயங்கள் பேசித் தீர்மானிக்கலாம்.

தேவஸ்தானம்

(973)


# சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் செப்ரெம்பரில்

## கல்வி அமைச்சு தகவல்

(கொழும்பு)

2023 (2024) ஆம் ஆண்டுக்கான சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவரும் காலம் தொடர்பில் கல்வி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதம் முதல் இரு வாரங்களில் வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கல்வி அமைச்சின் வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போது குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுவதற்கு தேவையான அனைத்துப் பணிகளும் தற்போது துரித கதியில் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## முன்னேற்றம்...

கரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை மேற்கோள் காட்டி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.


ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் இலங்கையில் மூன்றில் ஒரு பகுதியினர் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை ஆராய்வதற்கும் சாட்சியங்களை சேகரிப்பதற்கும் பல்வேறு முறைகளின் ஊடாக ஏற்பட்டுள்ள தடைகளை ஆராய்ந்து சர்வதேச சமூகத்தின் தலையீட்டிற்கான தற்போதைய பிரேரணையை புதுப்பிக்குமாறு மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் சபையின் உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் அமர்வில், தற்போதுள்ள தீர்மானத்தை புதுப்பிப்பதற்கு மேலதிகமாக இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)


கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி ஜனிதா சிறிகாந்தன்
அவர்களின் பாசமிகு கணவர்



அமரர் மகாலிங்கம் சிறிகாந்தன்

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 02.05.1979 மறைவு 27.08.2024

கல்லூரிச் சமூகம்
யா/ மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பளை

(C-1066)



DHL MoneyGram money transfer Ria WESTERN UNION WU

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப உறவுகளிடமிருந்து Western Union, Money Gram, Ria மூலம் அனுப்பியபணத்தினை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடுங்கள் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை


SRI MURUGAN TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
No.303, K.K.S Road, Jaffna. TEL : 076 315 6470

(C-1068)


## தாங்கிக்...

நேற்று செவ்வாய்க்கிழமை (27) வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சடலம் எடுத்துவரப்பட்டு அங்கு யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)


# மரண அறிவித்தல்



மலர்வு 28.07.1974
உதிர்வு 26.08.2024

## லயன் பத்மநாதன் ஐங்கரன் MJF

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும் சிவகுருநாதன் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவரும், யாழ்ப்பாணம் சிற்றிலயன்ஸ் கழக முன்னாள் தலைவரும், யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி உதவி முகாமையாளருமான பத்மநாதன் ஐங்கரன் அவர்கள் 26.08.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இங்கிரியா பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற பத்மநாதன் - கமலாம்பிகை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வுபெற்ற CTB நடத்துநர்) - செல்வநாயகம்மா (நேசம்) தம்பதியின் அன்பு மருமகனும் யாழினி(தேசிய சேமிப்பு வங்கி - மானிப்பாய்) அவர்களின் அன்புக் கணவரும் ஜஸ்விந்(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) அவர்களின் பாசமிகு தந்தையும் ஹேமாவதி, கௌரிஅம்பாள் (அதிபர் - காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), கல்யாணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலினி, நாகேந்திரன் (சட்டத்தரணி - லண்டன்), கமலேந்திரன் (பொறியியலாளர் - கனடா), கெங்காதரன், அருள்மொழி, கணேசலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் உதயகுமார், பகீரதி, காயத்திரி ஆகியோரின் சகலனும், சபேசன், சஞ்சீவன், சஜீவன், சசிரூபன், சானுஜன், நிசாந்தி, சயந்தன், வசீகரன், கஜீபா, தாராதேவி, லக்ஸ்மிகா, அயன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிசாந், றொசாந், லக்சிகா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.08.2024 நாளை வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

20/3, சிவகுருநாதன் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
[illegible] (யாழினி - மனைவி)

தகவல் :
மனைவி, மகன், சகோதரர்கள், மைத்துனர் குடும்பத்தினர்

(அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டின் விஞ்ஞாபனம் அடுத்த மாதம் வெளியீடு


(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

கொள்கைப் பிரகடனத்தை தயாரிக்கும் இறுதிப் பணிகள் இந்த நாட்களில் இடம்பெற்று வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமுர்த்தி இயக்கத்தை பலப்படுத்தி அதனை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (நி-6)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரா ஒலிம்பிக்கில் 8 தடகள வீரர்கள் இலங்கையிலிருந்து பங்கேற்பு

## பாரிஸில் இன்று ஆரம்பம்

2024ஆம் ஆண்டுக்கான பரா ஒலிம்பிக் குறித்த போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஆரம்ப மாகவுள்ளது.

இங்கிலாந்திலுள்ள Stoke Mandeville என்னும் இடத்தில்தான் முதன் முதலில் பரா ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின.




1948ஆம் ஆண்டு, Stoke Mand eville இல் அமைந்துள்ள மருத்துவமனையில், உடற்குறைபாடுகள் கொண்ட போர் வீரர்களுக்காக ஜேர்மன் நரம்பியல் நிபுணரான Ludwig Guttmann என்னும் மருத்துவர், விளையாட்டுப் போட்டிகளை நடத்தினார்.

ஆகவேதான், Stoke Mandevilleஇல் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத்திடலிலிருந்து பரா ஒலிம்பிக் தீபம், பிரான்ஸியும் பிரித்தானி யாவையும் இணைக்கும் Channel Tunnel என்னும் கடலுக்கடியில் செல்லும் சுரங்கப்பாதை வழியாக பிரான்ஸிற்கு கொண்டு வரப்படுகிறது.

இந்த நிலையில், இந்த போட்டிகளில் பங்கேற் பதற்காக இலங்கையிலிருந்து 8 தடகள வீரர்கள் அடங்கிய குழுவொன்று பிரான்ஸிற்கு சென்றுள்ளது.

அதிகளவான வீரர்கள் இலங்கையிலிருந்து பங்கேற்பது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 200-250 | 300 |
| உருளைக்கிழங்கு | 210 | 190 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 100-130 | 200 |
| தக்காளி | 300 | 300 | 240 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 190 | 200 | 200 |
| கோவா | 350 | 350 | 300 | 350 |
| கரட் | 320 | 180 | 350 | 400 |
| பூசணி | 140 | 100 | 60 | 120 |
| புடோல் | 100 | 80 | 80 | 150 |
| வாழைக்காய் | 300 | 250 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300-350 | 100-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 300 |
| வெண்டக்காய் | 100 | 80 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 150 | 280 |
| பயற்றங்காய் | 200 | 150 | 100-130 | 200 |
| லீக்ஸ் | 350 | 320 | 350 | 400 |
| பீற்றூட் | 140 | 300 | 250 | 150 |
| கறிமிளகாய் | 650 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 100-150 | 200 |
| போஞ்சி | 550 | 550 | 400 | 600 |
| கத்தரி தம்புள்ள | 150 | 250 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 120 | 50 | 60 | 100 |
| தேசிக்காய் | 350 | 500 | 300-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 140 | 80 | 80-110 | 70-130 |
| இராசவள்ளி | 800 | 700 | 620 | 800 |
| வெங்காயப்பூ | 200 | 250 | -- | 320 |
| முள்ளங்கி | 120 | 150 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 90 | 60 |
| வல்லாரை | 40 | 80 | 70 | 80 |
| ஈரப்பலா | 60 | 50 | 80 | 60 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3207

பிருந்தா




மது




கரிஸ்




விதுஷா




மிதுனா




அக்ஷி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூரான் திருவிழவை நான் கண்டு கொண்டேனே ! - கம்பவாரிதி இ. ஜெயராஜ்

## கயிலாச வாகனம்

கயிலாய வாகனத்தில் முருகன் ஏறி
கால் அதனால் இராவணனை அழுத்திக் கொண்டு
மயில் மேலே வருமாற்போல் பதற்றமின்றி
மக்களெலாம் பார்த்திடவே அசைவான் மண்ணில்
ஒயிலாக வரும் காட்சி உவப்பின் உச்சம்
உயர்வுமிகு அவ்வழகைக் காணவென்று
பயிலாத சிறுவர்களும் பெற்றோர் தம்மின்
பாதமதைத் தமதாக்கி எழுந்து நிற்பர்.

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

## திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய அரியநேந்திரன்



(யாழ்ப்பாணம்)
நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் நினைவுத் தூபிக்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். (நி-6-33)

## வெளிநாடு சென்றுள்ள வேட்பாளர்கள்

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த சுமார் 300 வேட்பாளர்கள் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக வெளிநாடு சென்றுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் பல்வேறு காரணங்களால் சுமார் 500 வேட்பாளர்கள் கட்சி மாறியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ரத்நாயக்க கருத்து தெரிவித்த போது. உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்தவர்களின் விபரங்களை கண்டறியும் விசேட நடவடிக்கை எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், வேட்பாளர்கள் தொடர்பில் அவ்வாறான விரிவான விசாரணை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (நி-6)




## நல்லைக் கந்தவேளே!

வள்ளிமட மாதுசெய் மாதவப் பேற்றினால்
மணம்புரிய வெண்ணிவந்து
கள்ளமாய் செய்திட்ட லீலைகள் யாவுமே
கணக்கில் லடங்காததே
உள்ளத்தி லொன்றியே யோங்குகுற மாதையும்
உட்டனேற்றுக் கொண்டகோவே
பள்ளத்தில் வீழ்ந்திங்கு பதறிடும் பத்தரையும்
பார்நல்லைக் கந்தவேளே!

**கலாபூஷணம், சந்தக்கவிஞர்,**
**நவ.பாலகோபால்.**

## எமையாளும் நல்லைப் பதியோனே!

நல்லையிலே வேல் இருக்க நமக்கென்ன
கவலையென்றால்
தொல்லையில்லா வாழ்வருளும் பெருமாளே,
எல்லையில்லா அன்புடனே கசிந்துருகும் மெய்யடியார்
நெஞ்சகத்தே அமர்ந்தருளும் குமரேசா,
பண்டுதொறும் வழங்கி வரும் முத்தமிழின்
தலைவனென
திகழ்கின்ற, திருமால் மருகோனே,
விண்புகழும் தேவர் துடைத்திடவே கொடுஞ்
சூரர் பகையறுத்திட்ட வடிவேலா,
தெய்வானை வள்ளியென இருமாதைப் புணர்ந்திட்ட,
உமையவளின் இளைய மகனாரே,
பொய்மையில்லா அடியவர்கள் தாம் பணிந்தேற்றுகின்ற
எமையாளும் நல்லைப் பதியோனே!

**சிரபுரத்தான்,**
**மண்டைதீவு.**

## இராசிபலன்

28.08.2024
ஆவணி 12, புதன்கிழமை
நவமி காலை 6.09 மணிவரை
தசமி பின்னிரவு 5.13 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 8.36 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
சந்திராஷ்டமம் - சித்திரை, சுவாதி

**வளவன்**

**மேஷம்:** உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**துலாம்:** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மகரம்:** வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**ரிஷபம்:** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நல்ல காரியத்திற்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்:** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வழிபாட்டு முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**தனுசு:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**மீனம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் விவகாரங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**வெற்றியோ தோல்வியோ நீ நல்ல முறையில் செயலாற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவளத்துணை நிலைய கட்டடம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

IOM நிறுவனத்தின் நிதி அனுசரணையில் யாழ் மாவட்ட செயலக உளவளத் துணை நிலைய கட்டடத் திறப்பு விழா நேற்று முன் தினம் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் IOM நிறுவன திட்ட முகாமையாளர் ஆகியோரால் திறந்து வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் IOM நிறுவன பிரதிநிதிகள், அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட செயலக சிறுவர், பெண்கள் அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-6)



நல்லூர் ஆலய வருடாந்த மஹோற்சவ 19 ஆம் திருவிழாவான நேற்று காலை 6.45 மணியளவில் இடம்பெற்ற வசந்தமண்டபப் பூஜையை அடுத்து ஏழு குதிரைகள் பூட்டிய இரதத்தில் எழுந்தருளிய சூரியபகவான் உள் வீதியுலா வந்து தொடர்ந்து வெளிவீதி வலம் வரும் காட்சி பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)



## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய இலங்கை சர்வதேச அமைப்பின் உலகளாவிய தலைமைத்துவ 4 ஆவது தேசிய மாநாடும் விருது வழங்கல் நிகழ்வும் அண்மையில் உரும்பிராய் கற்பக இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரினால் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த பசுபதி இராசேந்திரத்திற்கு கலாநிதி விருது வழங்கி வைக்கப்பட்டிருந்தது. (நி-6)

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஞான வைரவர் தேவஸ்தானத்தில் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரையுள்ள சுபவேளையில் கலட்டி வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ து.விவேகானந்த குருக்கள் தலைமையில் சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய குரு சிவஸ்ரீ.க.ஐங்கரன் குருக்கள் நடத்தி வைக்கவுள்ளார். அதனை முன்னிட்டு பால் காப்பு நாளை காலை 9 மணி தொடக்கம் 4 மணிவரை நடைபெறும்.(நி-6)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-நித்தியானந்தன் சிவாஜன், வயலின்-கே.வேலதீபன், மிருதங் கம்-தி.அரன்ராஜ், முகர்சிங்-மோகனதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15-8.05 மணிவரை இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-பொன்.ஸ்ரீவாமதேவன், வயலின்-இ.நிரோஜன், மிருதங்கம்-அ.அமிர்தலோஜனன், கஞ்சிரா-அ.சண்முகப்பிரியன் மற்றும் முகர்சிங்-நி.மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# கைதான 8 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பினுள் சட்டவிரோதமாக ஒரு விசைப் படகுடன் நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களைக் கைது செய்த நிலையில் செப்ரெம்பம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நேற்று முன் தினம் இரவு சட்டவிரோதமாக ஒரு விசைப் படகுடன் நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதன் போது விசாரணைகளை முன்னெடுத்த மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை செப்ரெம்பர் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (நி-6-285)

# கண்ணீர் அஞ்சலி

வலம்புரிப் பத்திரிகையின் ஆரம்பகால வளர்ச்சியில் முன்னின்று உழைத்த, அன்பிற்கினிய ஊடகவியலாளர்

**அமரர்.லயன். பத்மநாதன் ஐங்கரன்**

(உதவி முகாமையாளர், யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி வங்கி)



அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா எல்லாம் வல்ல தில்லைக் கூத்தன் திருவடிகளில் இளைப்பாற இறைவனை வேண்டி வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும் வலம்புரிக் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று கடற்தொழில் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களால் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன், அவை தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. புதிய முன்மொழிவுகளுக்கான அனுமதிகளும் பெறப்பட்டன.

மேலும், மாவட்டத்தில் இடம்பெறும் பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த விசேட திட்டங்களை வகுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் யாழ்- கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட பதில் அரச அதிபர் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், பல்வேறு திணைக்களங்களின் தலைவர்கள், கிளைத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-316)

# சூட்சுமமாக கடத்த முயன்ற 32 பாலை மரக்குற்றிகள் மீட்பு

## ஒருவர் கைது




(தருமபுரம்)

சூட்சமமான முறையில் வாகனத்தின் அடிப்பகுதியில் மறைத்து கொண்டு செல்லப்பட்ட பெறுமதி மிக்க 32 பாலை மரக்குற்றிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் வாகனத்தின் சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட புளியம் பொக்கனை பகுதியில் பொலிஸார் வீதிச் சோதனையில் ஈடுபட்ட வேளையில் புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து யாழ் நோக்கிப் பயணித்த கப்ரக வாகனத்தை மறித்து சோதனையிட்ட வேளை குறித்த 32 பாலை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட மரக் குற்றிகள், கப்ரக வாகனம், சாரதி ஒருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்திய வேளை செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-316)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

23. ஐயனார் கோயில் 1ஆம் ஒழுங்கை, வட்டாரம்-04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04. ஐயனார் கோயில் 1ஆம் ஒழுங்கையிலுள்ள இல: 23 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **முதலித்தம்பி கைம்பெண் பார்வதி** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **சோமசுந்தரம் கைம்பெண் புஸ்பதேவி** ஆகியவர் குறித்த ஆதனத்திற்கு தனது காலஞ்சென்ற கணவர் முதலித்தம்பி சோமசுந்தரத்தின் பேர்த்தியாராகிய சின்னத்தம்பி முத்துப்பிள்ளை ஆகியவருக்கு சொந்தமாக இருந்தது என்றும் அவரது இறப்பின் பின்னர் அவரது மகனான அரியகுட்டி என்பவரால் குறித்த ஆதனம் ஆட்சி செய்யப்பட்டு வரப்பட்டது என்றும் குறித்த அரியகுட்டி உயிரோடு இருக்கும் காலத்தில் குறித்த ஆதனத்தை தனது மருமகனாகிய சோமசுந்தரம் என்பவருக்கு வாய்மொழி மூலம் நன்கொடையாக வழங்கியிருந்தார் என்றும் அதன் பின்னர் குறித்த சோமசுந்தரம் என்பவர் குறித்த ஆதனத்தினை ஆட்சிசெய்துவந்திருந்தார் என்றும் அதன்பின்னர் குறித்த சோமசுந்தரம் ஆகியவர் அவரது மனைவியான தனக்கே குறித்த ஆதனத்தை வாய்மொழி மூலம் நன்கொடையளித்திருந்தார் என்றும் குறித்த ஆதனம் நீண்டகாலமாக தனது ஆட்சியிலும், கட்டுப்பாட்டிலுமே இருந்து வருகின்றது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் 1933/ 02.09.1998ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

**தம்பிராஜா கனகநாயகம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3538/17.02.2002ஆம் இலக்க உறுதியால் குறித்த **சோமசுந்தரம் கைம்பெண் புஸ்பதேவி** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**மதிரூபன் பெண் சுகந்தி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஷாளினி ஜெயபாலச்சந்திரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 66/19.08.2018 ஆம் இலக்க உறுதியால் குறித்த தம்பிராசா கனகநாயகம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**செல்வதுரை ஆனந்தகுமாரும் பெண் மகாலட்சுமியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வி.இளங்குமார் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1726/31.10.2023ஆம் இலக்க உறுதியால் குறித்த **கனகநாயகம் சுகந்தி மறுநாமம் மதிரூபன் பெண் சுகந்தி** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **செல்வதுரை ஆனந்தகுமாரும் பெண் மகாலட்சுமியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **செல்வதுரை ஆனந்தகுமாரும் பெண் மகாலட்சுமியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(1796)

செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

# சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பௌதிகவியல் ஆசிரியர்

## திருமதி. ஜனகேஸ்வரன் கிருபா (B.Sc SLTS-I)




சேவை விபரம்

- யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (11.01.1993-31.07.2007)
- யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (01.08.2007- 03.01.2021)
- யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (04.01.2021-27.08.2024)

(சி-1061)


வாழ்த்துவோர்-
ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

கல்விக்கு அரும்பணியாற்றி ஓய்வு பெறும்
ஆசிரியரின் ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஐஸ்லாந்தில் வெடித்த எரிமலையால் பிரித்தானியர்களுக்கு ஆபத்து



(லண்டன்)

ஐஸ்லாந்தில் எரிமலை வெடித்ததால் அங்கிருந்து அமில வாயு பிரித்தானியாவை நோக்கிச் செல்கின்றன. இது காற்றின் தரத்தில் சரிவை ஏற்படுத்தும் என முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் அமில வாயு மேகம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வானிலை வரைபடங்கள் எரிமலை சல்பர் டை ஒக்சைட்டின் பட்டைகளைக் காட்டுகின்றன.

சல்பர் டை ஒக்சைடு மூச்சுக்குழாய் அழற்சி போன்ற சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் மற்றும் உங்கள் மூக்கு, தொண்டை மற்றும் நுரையீரலை எரிச்சலடையச் செய்யலாம்.

இது இருமல், மூச்சுத் திணறல், சளி மற்றும் ஆஸ்துமா தாக்குதல்களை ஏற்படுத்தக்கூடும், அதேநேரத்தில் நீங்கள் உடற்பயிற்சி செய்யும் போது விளைவுகள் மோசமாக இருக்கும். சல்பர் டை ஒக்சைடு இருதய நோயையும் ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-6)

## கனடாவுக்கு

## இலங்கையர்களின் ச

(ஒட்டாவா)

**கனடாவுக்குக் குடிபெயரும் ஊழியர்களின் எண்ணிக்கையைச் முடிவெடுத்துள்ளது.**

குறைந்த வருமானம் கொண்ட வேலைகளுக்காகக் கனடாவில் தற்காலிகமாகக் குடிபெயரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால், கனேடியர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைந் துள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

எனவே கனேடிய நாட்டவர்களுக்கு முக்கியமாக இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்

கத்தி
எடுத்
பிரத
நேர்
தார்.
செ
குறை
குறை

## ஒடிசாவில் பறவைக்காய்ச்சல் எதிரொலி
## 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோழிகள் அழிப்பு

(டில்லி)

ஒடிசாவின் புரி மாவட்டத்தின் பிபிலி பகுதியில் பறவைக்காய்ச்சல் வைரஸ் பரவல் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதைத்தொடர்ந்து மாநில அரசு தீவிர தடுப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக சுகாதாரத் துறை சார்பில் அவசர நிலையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக பிபிலி பகுதியில் உள்ள கோழிப் பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளை கொன்று அழிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.



கடந்த 23 ஆம் திகதி தொடங்கிய இந்தப் பணிகள் நேற்று முன்தினம் மாலையில் நிறைவடைந்துள்ளது.

இதில் மொத்தம் 11,700 கோழிகள் கொன்றழிக்கப்பட்டதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-6)

## அதிவேகமாக உருமாற்றம் அடையும் குரங்கம்மை

### எச்சரிக்கும் விஞ்ஞானிகள்

(வோஷிங்டன்)

குரங்கம்மை திரிபு எதிர்பார்த்ததை விட அதிவேகமாக உருமாற்றம் அடைந்து வருவதாக விஞ்ஞானிகள் அதிர்ச்சித் தகவலை தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான காங்கோவில் பரவி வந்த குரங்கம்மை தொற்று, தற்போது ஐரோப்பிய நாடுகளிலும், அண்டை நாடான பாகிஸ்தானிலும் பரவி உள்ளது. "எம் பாக்ஸ்" எனப்படும் குரங்கம்மை தொற்று, உலகளாவிய சுகாதார அவசர நிலையாக, உலக சுகாதார அமைப்பு சமீபத்தில் அறிவித்தது.

1970களில் ஆபிரிக்காவில் அவ்வப்போது பரவும் இந்தத் தொற்று 2022இல் தான் உலகின் மற்ற நாடுகளிலும் பரவத் தொடங்கியது. அதன் பிறகே உலக நாடுகளின் கவனம் பெற்று பொது சுகாதார பிரச்சினையாக உரு வெடுத்துள்ளது.

இந்தாண்டில் மட்டும் கொங்கோவில் சுமார் 18 ஆயிரம் பேருக்கு குரங்கம்மை பாதிக்கப்பட்டதாகவும் அதில் 615 பேர் உயிரிழந்ததாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. குரங்கம்மை திரிபு எதிர்பார்த்ததை விட அதிவேகமாக உருமாற்றம் அடைந்து வருவதாக விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி விஞ்ஞானிகள் தெரிவிப்பதாவது, குரங்கம்மை வைரஸ் பெரியம்மை தொற்றில் இருந்து உருவாகியுள்ளது.

50 ஆண்டுகளுக்கு முன்னதாகப் பெரியம்மை தொற்று பரவியபோது, தடுப்பூசி செலுத்தப்பட்டு படிப்படியாக தொற்று முடிவுக்கு வந்தது. அதன்பிறகு பெரிதளவில் பாதிப்பு இல்லாமல் இருந்த நிலையில், தற்போது குரங்கம்மை தொற்றாக உருவெடுத்துள்ளது. குரங்கம்மையைப் பற்றி ஆராய்வதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன.

அதன் திரிபு அதிவேகமாக உருமாற்றம் அடைந்துக்கொண்டே இருக்கிறது. இதனால் எம் பாக்ஸ் தடுப்பதற்குள் வேகமாக பரவுகிறது. கட்டுப்படுத்துவதில் சிரமம் உள்ளது. குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் குறைந்த நோயெதிர்ப்பு திறன் கொண்டவர்களை எளிதில் தாக்குவதுடன், உயிரிழக்கும் அபாயத்தையும் உருவாக்குகிறது என தெரிவித்துள்ளனர். (நி-6)

## 5 வயதில் சிகரம் தொட்ட சிறுவன்




(தான்சானியா)

தான்சானியாவில் 19,340 அடி உயரத்தில் அமைந்துள்ள கிளிமஞ்சாரோ சிகரம் ஆபிரிக்காவின் மிக உயரமான சிகரம் ஆகும்.

ஆசியாவிலேயே குறைந்த வயதில் இந்த கிளிமஞ்சாரோ சிகரத்தைத் தொட்டவர் என்ற சாதனையைப் பஞ்சாபைச் சேர்ந்த 5 வயதான டெக்பீர் சிங் படைத்துள்ளார். கடந்த 18 ஆம் திகதி கிளிமஞ்சாரோ மலையின் மீது ஏற ஆரம்பித்த டெக்பீர் சிங், 23 ஆம் திகதி அந்த மலையின் மிக உயரமான இடமான உஹுருவை அடைந்தார்.

டெக்பீர் சிங்கின் இந்த சாதனைக்காக அவரின் தந்தையும் அவருடன் மலை ஏறியுள்ளார்.

தனது மகனின் இந்த சாதனை குறித்து கருத்து வெளியிட்ட அவர், "டெக்பீர் சிங் இதற்காகக் கடுமையான மலையேற்ற பயிற்சிகள், இதயம் மற்றும் நுரையீரலுக்கான சுவாச பயிற்சிகள் ஆகியவற்றை மேற்கொண்டார்.

அவரது இந்த சாதனை எங்கள் குடும்பத்தைப் பெருமைப்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...க்கு இனி செல்ல முடியாது!


## ...ர் கனவில் மண்தூவிய ட்ரூடோ

...நம் தற்காலிக வெளிநாட்டு ...யைக் குறைக்க அந்நாட்டு அரசு

...கத்தில் இந்த முடிவை அரசு எடுத்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்றைய தினம் அறிவித் ...தார்.

தொழிலாளர் பற்றாக் ...குறையை நிரப்பவும், ...குறைந்த ஊதியத்தில் வெளி நாட்டவர்கள் வேலைக்கு வருவார்கள் என்பதாலும் கடந்த 2022 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட தற்காலிக வெளிநாட்டு பணியாளர் திட் டத்தின் கீழ் அதிகமானோர் அங்கு தற்காலிகமாக குடி யேறி வருகின்றனர்.

இந்த நிலையில் இதன் மூலம் கடந்த ஆண்டுகளில் மக்கள் தொகை அதிகரித்து. வீட்டு வசதி மற்றும் மற்ற சேவைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகும் என்ற நோக்கத்தில் அந்த திட்டத்தில் திருத்தம் செய்து குடிபெயர்வோரை தடுக்கும் முடிவை அரசு எடுத்துள் ளது. இதைத்தவிர்த்து நிரந் தர குடியுரிமை பெற்ற வெளி நாட்டவர்களின் எண்ணிக் கையையும் குறைக்க கனடா அரசு திட்டமிட்டு வருவதாக வும் தகவல்கள் வெளியாகி யுள்ளன. (நி-6)



...றம் ...மை

...ர்

...மாற்றம் ...ருவதாக ...ர்ச்சி தக ...ளனர். ...நானிகள் ... குரங் ... பெரி ... இருந்து

...க்கு முன் ... தொற்று ...தடுப்பூசி ...ப்படியாக ... வந்தது. ...தளவில் ... இருந்த ...து குரங் ... உருவெ ...நரங்கம் ...ாய்வதில் ...ள் உள்

...அதிவேக ... அடைந் ...க்கிறது. ...ஸ் தடுப் ...க பரவு ...துவதில் ...ழந்தை ... மற்றும் ...யதிர்ப்பு ...ர்களை ...ன், உயி ...தையும் ...ண தெரி (நி-6)

## ஜி.பி.எஸ் கோளாறு... தீர்ந்தது எரிபொருள்...

### பாலைவனத்தில் சிக்கி இருவர் உயிரிழப்பு

(ஜெர்த்தா)

சவுதி அரேபியாவில் டவர் தொழில்நுட்ப வல்லுநராகப் பணிபுரியும் தெலுங்கானா வைச் சேர்ந்த 27 வயதான ஷாபாஸ் கான், கடந்த மூன்று ஆண்டுகளாக சவுதி அரே பியாவில் உள்ள கான் அல் ஹாசா பகுதியில் தொலைத் தொடர்பு நிறுவ னத்தில் டவர் தொழில்நுட்ப வல்லுநராகப் பணிபுரிந்து வந்தார்.

இவர் 5 நாட்களுக்கு முன்பு சக ஊழியருடன் வழக்கமான வேலைக்காக புறப்பட்டார். பணிதொடர்பாக ஷாபாஸ் மற்றும் சக ஊழியர் ஜி.பி.எஸ் உதவியுடன் காரில் சென்றுக் கொண்டிருந்தனர்.


அப்போது ஜி.பி.எஸ் இல் ஏற்பட்ட கோளாறால் இரு வரும் ரூபா அல்-காலி பாலைவனத்தின் நடுவே சிக்கிக் கொண்டனர்.

அவர்கள் சென்ற காரில் எரிபொருளும் தீர்ந்து விட்டது. அவர்கள் வைத்திருந்த செல்போனில் சிக்னலும் இல்லை. இதனால், வெளியே யாரையும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

உண்ண உணவு, குடி க்கத் தண்ணீர் இன்றி வெயி லில் 5 நாட்களாகத் தவித்த ஷாபாஸும், சக ஊழியரும் உலகின் மிக ஆபத்தான பாலைவணங்களில் ஒன்றான ரூபா அல்-காலி பாலைவனத் தில் சிக்கி உயிரிழந்தனர்.

பாலைவனத்தில். ஒட்ட கங்கள் உட்பட மனித வாழ் விடம் மற்றும் வனவிலங் குகள் இல்லாததால், தொலைந்து போன இரு வருக்கும் உதவி தேடவோ அல்லது நிலப்பரப்பில் செல் லவோ முடியாத சூழல்.


இருவர் காணாமல் போனதாக அவர்களது நிறு வனம் புகார் தெரிவித்த பிறகு, சவுதி அதிகாரிகள் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். இறுதி யில், சவுதி அதிகாரிகள் இருவரையும் சடலங்களாக மீட்டனர். (நி-6)





## சூடானில் நீர்த்தேக்க அணைக்கட்டு உடைப்பு!

- 30 பேர் உயிரிழப்பு
- 20 கிராமங்கள் பாதிப்பு
- 200 பேர் வரை மாயம்



(கார்டூம்)

சூடானில் பெய்து வரும் பலத்த மழையினால் நீர்த் தேக்கத்தின் அணைக்கட்டு உடைந்துள்ளதையடுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 20 கிராமங்கள் பாதிக்கப்பட் டுள்ளதுடன் 30 பேர் உயிரி ழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மேலும் பலர் உயிரிழந்திருக் கலாம் என ஐக்கிய நாடுகள் சபை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதி பல மாதங் களாக உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட பகுதியாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெய்த பலத்த மழையால் துறைமுக நகரமான போர்ட் சூடானில் இருந்து வடக்கே 40 கிலோ மீற்றர் (25 மைல்) தொலைவில் உள்ள அர்பாத் நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டே உடைந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்தப் பகுதி அடையாளம் காண முடியாத அளவிற்கு அழிந்துள்ள தோடு மின்சாரம் மற்றும் தண்ணீர்க் குழாய்கள் சேத மடைந்துள்ளன.

150 முதல் 200 பேர் வரை காணாமல் போயுள் ளது டன் ஏறக்குறைய 50,000 பேரின் வீடுகள் வெள்ளத் தால் பாதிக்கப்பட் டுள்ளன.

இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி தங்கச் சுரங்கத் தொழி லாளர்களும் பாதிக்கப்பட்டுள் ளார்கள்.

இதே போன்ற சம்பவம் கடந்த ஆண்டு செப்ரெம்பரில் கிழக்கு லிபிய நகரமான டெர்னாவில் சூறாவளி காற் றுடன் பெய்த மழையினால் நீர்த்தேக்கத்தின் அணைகள் உடைந்து ஆயிரக்கணக் கான மக்கள் உயிரிழந்துள் ளனர்.

சூடானின் முக்கிய செங் கடல் துறைமுகம் மற்றும் வேலை செய்யும் விமான நிலையத்தின் தாயகமாக இருக்கும் போர்ட் சூடானின் முக்கிய நீர் வளம் இந்த நீர்த்தேக்கமாகும்.

நீர்த்தேக்கம் உடைந் தமையினால் வரவிருக்கும் நாட்களில் நகரம் வரட்சியால் அச்சுறுத்தப்படலாம் என சூடான் சுற்றுச்சூழல் ஆர்வ லர்கள் சங்கம் ஒரு அறிக்கை யில் தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஜனாதிபதியானால்


# எரிபொருள் விலை 200 ரூபாயால் குறைக்கப்படும்

## ஜனக ரத்நாயக்க சூளுரை

(கொழும்பு)

தாம் ஜனாதிபதியான பின்னர் மக்களுக்கு குறைந்த விலையில் அனைத்து பொருட்களையும் வழங்குவதற்கும் அதன் கீழ் மதுபானத்தின் விலையை இருபத்தைந்து சதவீதம் குறைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஐக்கிய லங்கா பொதுஜன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்திருந்தார். மதுபானங்களின் விலையேற்றம் காரணமாக சட்டவிரோத மதுபாவனை அதிகரித்து மக்களின் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிப்பதாக அவர் தெரிவித் துள்ளார். ஹோமாகமவில் தேர்தல் பிர சாரத்தில் ஈடுபட்டிருந்த போதே இதனைக் குறிப்பிட்ட ஜனக ரத்நாயக்க மேலும் தெரி விக் கையில், நடைமுறையில் செயற்படுத்தக்கூடிய திட்டங் களை மக்களிடம் முன்வைத் தவன் நான். அதன்படி இருபது பொருட்களின் விலையை நிலைப்படுத்தி பொது மக்களுக்கு சலுகைகள்வழங்கப்படும்.


குறிப்பாக உலர் பழங்களை வாங்கும் போது, ஒரு கிலோ உலர் பழம் எண்ணூறு ரூபாய் இலாபமாக தொழில திபர் களுக்கு கிடைக்கிறது. எரிபொருட்களின் விலை உயர் வினால் மரக்க றிகளின் விலை அதிகரிப்பு ஏற்பட் டுள்ளது.ஒரு லீற்றர் எரிபொருளின் விலையை இருநூறு ரூபாயால் குறைக் கலாம் என இரண்டு வரு டங்களுக்கு முன்னர் கூட்டுறவு சங்கத்தில் கூறினேன். ஆனால் கடந்த ஆறு, ஏழு மாதங்களுக்குள் எரிபொருளின் விலை பத்து ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, மரக்கறி விலைகள் அதிகரிக்கிறது. எனது அரசாங்கத்தின் கீழ் ரயிலில் சரக்குகள் கொண்டு செல்லப்படும். எனது ஆட்சியில் மதுவின் விலை குறைக்கப்படும், ஆனால் மது அருந்த வேண்டும் என்று அதற்கு அர்த்தமில்லை. மது அருந்துபவர்களுக்கு நியாயமான விலையில் மது வழங்குவது தான் என தெரிவித்தார். (நி-6)



பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத் தேர்த்திருவிழா, ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி தினமான நேற்று செவ்வாய்க்கிழமை பக்தி பூர்வமாக ஆரம்பமானது

(படம்: சிவசாந்தன்)

# திருமலை ஆயரை சந்தித்து ஆசி பெற்ற சஜித்



(திருகோணமலை)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித்பிரேமதாஸ, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகையை நேரில் சந்தித்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

நேற்று முன்தினம் திருகோணமலை, சேருவில நகரில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் திருகோணமலை மறை மாவட்ட ஆயரை சஜித்பிரேமதாஸ சந்தித்து ஆசி பெற்றதுடன் சமகால அரசியல் விட யங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினார். (நி-6)

# முன்னாள் அமைச்சர் பௌசிக்கு 2 வருட கடூழிய சிறை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசிக்கு 2 வருட கடூழிய சிறைத் தண் டனையும் 10 வருட காலத் திற்கு பணி இடை நிறுத்தமும் செய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று உத்தரவிட்டுள் ளார்.

இதில் ஏ.எச்.எம் பௌசி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, குற் றச்சாட்டின் பேரில் அவர் குற்றவாளி என நீதி மன்றம் தீர்ப்பளித்ததுடன் 4 இலட்சம் அபராதம் செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள் ளார்.

2010 இல்ஏ.எச்.எம்பௌசி அனர்த்த முகா மைத்துவ அமைச்சராக கடமையாற்றிய போது, நெதர்லாந்திலிருந்து சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான சொகுசு வாக னத்தை அமைச்சின் பேரி டர் முகாமைத்துவ நட வடிக்கைகளுக்காக தனது தனிப்பட்ட பாவனைக்காக பயன் படுத்தியதாகவும், நிதியமைச்சு வாகனத்தின் பராமரிப் புக்காக சுமார் 10 இலட் சம் ரூபாய் பணம் செலவழித்தமை போன்ற 4 குற்றச் சாட்டுக் களின் கீழ் சட்டமா அதிபரால் ஒதுக்கப்பட்டுள்ள வழக்கு நேற்று விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் இந் தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (நி-6)


மணிவிழா வாழ்த்து



திருமதி. கிருபா ஜனகேஸ்வரன்

சேவை விபரம்

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி - (11.01.1993-31.07.2007)

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - (01.08.2007-03.01.2021)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - (04.01.2021-27.08.2024)

கல்வியதை கண்ணாய் கருதி மாணாக்கர் கல்விக் கண்திறந்த அரும்பெரும் ஆசிரியையே உங்கள் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாய் சிறந்திட இறைவனை வேண்டி வணங்குகிறோம்.

Best Wishes!

(972)

வாழ்த்துவோர்:
ஆசிரிய நண்பர்கள், யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் களபூமி கரப்பிட்டியந்தனை

## அருள்மிகு கற்பகவிநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக மகாயாகம் இன்று 7.56 மணிக்கு ஆரம்பம். (30.08.2024- மகாகும்பாபிஷேகம்)



"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்செஞ்சொல்
பெருவாக்கும், பீடும்பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால், வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை"

திருமூலர் சிவபூமியாகப் போற்றிய மாங்கனி போன்ற இலங்கையின் வடபால் அமர்ந்து அருள்புரியும் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக மஹாயாகம் இன்று காலை 7.56 மணிக்கு ஆரம்பம். எம்பெருமான் அடியார்கள் 30.08.2024 காலை மஹாகும்பாபிஷேகத்தை தொடர்ந்து வரும் நிகழ்வுகளில் கலந்து திருவருள் பெற்று உய்வோம்.

ஈழத்துச் சிதம்பரம் திண்ணபுரத்தில் பூரண புட்கலை ஐயனார், வைரவர் பூசை செய்த ஆண்டிக்கு ஓர் ஒளிக் கீற்றுக் காட்சி கொடுத்து அங்கு அது விக்கிரகம் எடுத்து வழிபட்ட 18ஆம் நூற்றாண்டில் (1800-1830) காலமாகும். அதே காலத்தில் விநாயகர் வழிபாட்டில் ஈடுபாடுடைய ஆழ்வார் காசிநாதருக்கு ஆலமரம் விருட்சமாகவும் அருகில் ஓர் ஒளிக்கீற்று காட்டி முதல் முதல் மடாலயமாகவும் பின்னர் அவரது பரம்பரை ஓர் ஆலயமா கவும் அமைத்து வழிபட்ட காலம்.

1823 ஆம் ஆண்டு அந்த ஆலயம் அமைத்த போது அங்கு அருகில் இருந்த கல்லு எடுத்துக் கட்டியதாக வழக்கு கோட்டில் பதிந்து அதன் தவணையை நினைத்து வேதனையுடன் இருந்தவர்க்கு கனவுக் காட்சியில் கொப்பி மாற்றுவதாகவும், தவணையில் கோட்டில் வழக்கு கொப்பி இல்லாமல் அவர் வீடு வந்து கற்பக விநாயகருக்கு அறுகம் புல் சாற்றி, பல தடவை குட்டி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து வழிபட்ட ஆலயம்.

நம்முன்னோர் பூசைகள் செய்து ஊர் மக்கள் வழிபட்டு அருள் பெற்றார்கள். எம் குல தெய்வத்தை நாம் மறந்தாலும் தெய்வம் எம்மை மறவாது. களபூமி விநாயகர் மறவார். பிள்ளை தாயை மறந்தாலும் தாய் பிள்ளையை மறவார்.

"பெற்ற தாய் தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே"

ஆலயம் அமைத்து வந்தவர்களின் மரபு வழியில் மறைந்த இந்திராணியின் பிள்ளைகளும் சாரதாவும் களபூமி மக்களும் தமது குல தெய் வமான கற்பக விநாயகர் புனருத் தாரணம் சீராகவும் சிறப்பாகவும் எம்பெருமானது திருத் தலத்தில் திருப்பணி பொருளாகவும், வசதி படைத்தோர் வாரி வழங்கியும், ஏனையோர் தங்கள் இயல்பிற்கும் கொடுத்தும் சரீர உதவி செய்தும் 2003 ஆம் ஆண் டிற்குப் பின் தற்போது 2024 இல் அருள்மிகு பூரண ஓர் ஆலயமாக அமைந்துள்ளது. நாம் கும்பாபிஷேக நிகழ்வுகளில் கலந்து சிறப்பிப்போம்.

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர்வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்"

சேக்கிழார்.

**இவ்வாறு சேக்கிழார் பெருமாள் அடியார்களைப் பற்றி திருத் தொண்டர் புராணத்தில் வாழ்த்துகிறார். சீர் அடியவர்களாகிய நாங்களும் பெருஞ் சாந்தி வைபத்தில் கலந்து நாமும் கலந்து நம் சந்ததியையும் வாழ வைத்து வழிபடுவோம்.**

குறிப்பு 28.08.2024 எண்ணெய்க் காப்பு காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை மஹாகும்பாபிஷேகம் 30.08.2024 வெள்ளிக்கிழமை காலை 6.56 தொடக்கம் 8.46 மணி வரையும். கும்பாபிஷேகம் தரிசித்தோர் குவலயத்தில் நலம் பெற்று வாழ்வார் கள்.

**க.கு.க சிவபாலன் (K.K.K)**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்**
**மாணிக்கவாசகர் மடலயம்**

(சி-1060)

# கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதிக்கு ஆதரவு

## ஹிஸ்புல்லா பகிரங்கம்

(அம்பாறை)

கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதியை ஆதரிப்பேன், கட்சியின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையுமென கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் ஆளுநர் வேண்டும் என்று எந்த ஒரு உடன்படிக்கையும் சஜித் பிரேமதாஸவுடன் செய்யப்படவில்லை.

தமிழ் முஸ்லிம் உறவுகளை சீரழிப்பதற்காகச் செய்யப்படும் பிரசாரம் இது. எனது பல்கலைக்கழகத்தை மீட்டுத் தந்ததுடன் அதைத் திறந்து வைக்கவும் ஜனாதிபதி முன்வந்தார், இதற்கும் அரசியலுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை.

எனது கட்சி முடிவெடுத்தால் நான் உங்களை ஆதரிப்பேன் என்று ஜனாதிபதியிடம் சொன்னேன். எனக்கும் அவருக்கும் எதுவித பிரச்சினையும் இல்லை என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# தல விருட்சத்திற்கு தலை...மை தவிர்க்கப்பட்டது எதற்காக?




**பேராசிரியர் கு.மிகுந்தன்**
**விவசாய உயிரியல்துறை,**

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

என்ன தலைப்பு ஒரு மாதிரியாக இருக்கின்றது என யோசிக்கின்றீர்களா? தேர்தல் தருணம் என்பதால் தப்பாக நினைத்துவிடாதீர்கள் தல விருட்சத்திற்கும் மீண்டும் தலைமை பற்றிய சிந்தனை வந்தது. அரிக்கேசியே தாவர குடும்பத்தின் தலை மகனுக்கு வடமாகாணத்தின் அலுவலக சின்னமாக இடமொதுக்கியிருப்பது ஆறுதலை தந்திருக்கின்றது. என்றாலும் வட கிழக்கு மாகாணங்களின் இணைப்பின் அங்கமாக அவற்றின் விருட்சமாக பனை மரத்துக்கு தலைமை கிடைக்குமா? இது பனை,தென்னை, கமுகு (பாக்கு) மரங்களின் அவற்றின் குடும்ப கூட்டணியின் வேண்டுதல்.

வடகிழக்கில் ஓங்கி வளர்ந்திருக்கும் தலவிருட்சம் மனித பேரழிவின் போது குறிப்பாக முகமாலை இயக்கச்சி பகுதிகளில் தலையிழந்த காட்சிகளெல்லாம் ஒருகாலத்தில் மனதை நெருடியிருந்தாலும் அவ்வாறு உயிரை விட்ட பின்னும் பறவைகளின் குறிப்பாக கிளிக்கூட்டத்தின் கூடாரமாக மாறி பலவகையின பறவைகளுக்கு வாழிடமாகவும் வாழ்ந்திருக்கின்றது என்றால் இறந்தும் பயன் கொடுத்த காட்சிகள் மனதுக்கு ரம்மியமாகவே இருக்கின்றது. சூழலியலாளர்களின் அவதானிப்பில் மரத்திற்கும் ஏன் மனிதத்திற்கும் இப்படியொரு விசேட தன்மையும் உண்டு. ஆனாலும் கண்டும் காணாமல் மரங்களை அதிலும் தல விருட்சங்கள் எனத் தெரிந்தும் வெட்டிக் கொண்டிருக்கின்றோமே ஒழிய நடவு செய்வதில் அதிக சிரத்தை காட்டவில்லை. அவ்வப்போது விசேட தினங்களை கொண்டாடி முகப்புத்தகங்களில் பதிவேற்றுவதோடு மரநடுகையும் நின்றுவிடுகின்றது. மில்க் வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களின் முழுமுயற்சியின் பயனாக பல இடங்களில் பனைகள் உயர்ந்து வளர்ந்திருப்பது இன்னமும் எமக்கான உந்து சக்தி.

தலவிருட்சமும் ஆண்டாண்டு காலமாக தனக்கும் விடிவு வந்து தன்மக்களுக்கும் விடிவு வராதா என ஏங்கியிருக்கின்றது. பனை, தென்னை, கமுகு குடும்பத்துதலைமகன் இவர். தன்னின மக்களை இயற்கைப் பேரழிவிலும் மனித



பேரழிவிலும் தனித்து நின்று தன் தலையை விலையாகக் கொடுத்து காப்பாற்றிய விருட்சம் இது. மரத்திற்குள்ள அந்த சிற்றறிவு கூட பல வேளைகளில் எம்மவர்களுக்கு இல்லாமல் போய்விட்டதே. மாகாண சபை முழுத்திறனுடன் இயங்கிய காலத்தில் ஏன் இப்போது கூட வடமாகாணத்து விருட்சமாக புங்கை மரத்திற்கே அந்த கௌரவம் கிடைத்தது. ஆனால் இன்றைக்கும் தமிழ் நாட்டின் விருட்சமாக பனை மரமே கௌரவத்தை பெற்றிருக்கின்றது.

சரித்திர சான்றுகளுக்கப் பால் எமது பிரதேசத்து தல விருட்சமொன்றின் விருத்தியையும் பயன்பாட்டையும் உள்ளடக்கிய எமது பனைசார் வாழ்வியலை அந்த அடையாளத்தை நாம் தொலைத்து விடக்கூடாது. பனை, தென்னை சமாசங்களின் வளர்ச்சியும் அவற்றின் மேம்பாடும் தென்னைக்கு நிகராக அதற்கும் மேலாக பனை வளத்திற்கு கொடுக்கப்படல் வேண்டும் என்னும் அவா அவர்களுக்குள்ளும் உண்டு. இதற்காக தேச மட்டத்தில் சபையும் வட பகுதியில் தனித்துவமான ஆராய்ச்சி நிறுவனமும் இருக்கின்றன. ஆய்வுகள், சஞ்சிகை களுக்கானதாக அல்லாது பனை தொழில்நுட்பம் மற்றும் பனை தொழில் விருத்தி பற்றியதாக இருத்தல் வேண்டும். பனை பற்றியஆய்வுகள் முழுமையாக முடுக்கி விடப்பட்டால் அதிலுள்ள பயன்பாடுகள் மற் றும் நவீன தொழில்நுட்பங்களின் உள்ளீர்ப்பு என்பன அலசி ஆராயப்பட்டு அதனது பயன்பாடுகள் மக்களுக்கு கிடைத்து விடும். விருட்சத்தின் பெயரில் அதிகாரங் களை எமக்கிடையில் பகிர்ந்து என்ன பயன் விருட்சத்திற்கான அதிகாரப் பகிர்ந்தளிப்பு இன்னமும் நடைபெறவில்லையே.

எம்மினியஉறவுகளே! புலம் பெயர்ந்த எம்உறவுகள் தமது குடும்பங்களுடன் குறிப்பாக அங்கே பிறந்த, வளர்ந்த தமது பிள்ளைகள் சொந்த பந்தங்களையும் தாய் மண்ணையும் வந்து பார்த்துச் செல்வது அதிகரித்திருக்கும் நிலையில் எமது வாழ்வியலின் சிறப்பை அதிலும் பனைசார் வாழ்வியலின் தனித்துவத்தை எடுத்துச் சொல்லும் காட்சிப்படுத்தல்கள் அதற்கான தரமான சுற்றுலா மையங்கள், உணவுமையங்கள் பயன்படுத்தும், பயன்படுத்திய பனை சார் பொருட்கள் தினமும் உயிர்ப்புப் பெறும் விஞ்ஞான தொழில்நுட்பங்களை உள்ளீர்த்து உலக தரத்தில் மதிப்பேற்றிய பொருட்களாக வடகிழக்கின் பெயர் தாங்கி பனை வளத்திற்கு குறைவின்றி வடபுலமெங்கும் அமைக்கப்படுவதன் அவசியத்தை இதில் பதிவிடுகின்றேன். குறிப்பிடத்தக்க அளவில் பலரது விடா முயற்சி பனைசார் வளங்களைப் பயன்படுத்தி பலதரமான உற்பத்திகளை உருவாக்கிக் கொண்டிருப்பது மனதிற்கு ஆறுதலளிக்கும் செய்திகள். பனை சார் வாழ்வியலின் விழுமியங்கள் மீளவும் புதுப்பிக்கப்பட்டு எம்மவர்களுக்கு உயிர்ப்பின் உன்னதத்தை விளக்கும் இயற்கை வாழிடங்கள் மற்றும் எம் பிரதேசத்து பறவைகள், விலங்கினங்கள் வாழும் வாழிடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

நல்லூர் முருகனின் திருவிழாவை மையப்படுத்திய காட்சிப்படுத்தல்கள் இன்னமும் எமது உறவுகளை ஒருங்கிணைக்கும் நன் முயற்சிகளாகும். சுற்றுலாவில் வரும் வெளிநாட்டவரை கவரும் உலகத் தரம் வாய்ந்த காட்சிப் பொருட்கள் எமது அடையாளத்தை பிரதி பலிக்கும் விருப்புப் பொருட்கள் என்பன எமது ஊரில் உருவாக்கப்பட்டு உலக சந்தைக்கு செல்லும் வழிவகைகள் இலகுவாக்கப்படல் வேண்டும். பங்களாதேஷின் நொங்கு வெற்றிட தொழில்நுட்பத்தினூடாக ரின்களில் அடைக்கப்பட்டு பெல்ஜியம் நாட்டில் சந்தைப்படுத்தப் பட்டிருப்பதை கண்ணுற்ற போது எமது பொருட்களை ஏன் இன்னமும் இப்படி நாம் காட்சிப்படுத்த வில்லை, விற்பனைக்கு விட வில்லை என்னும் கேள்வி திரும்ப திரும்ப உறுத்திக் கொண்டே இருக்கின்றது.

பனைவளத்தைப் பற்றிய கற்றல் பல்கலைக்கழக பட்டங்களின் பாடங்களில் சிறு அலகுகளாக இணைந்திருந்தாலும் முழுமையான பாடத்திட்டத்தில் பனைசார் வாழ்வியல், பனை வளத்தின் இருப்பு, பயன்பாடு, பனை வள விருத்தி, பனை விவசாயம், பனை சார் பொருண்மியம், பனை வள தொழில்நுட்பம், உலகசந்தையில் பனை வளத்தின் பதிவு, பொருட்களின் உலக மய மதிப்பேற்றம், பனை சார் வர்த்தகம் இப்படி இன்னோரன்ன விடயங்கள் கற்பிக்கப்படல் வேண்டும். கற்பிப்பதோடல்லாமல் பனையின் பெருமைகூறும் ஆய்வுகளும் அங்கொன்றும் இங்கொன்று இல்லாது முழுஅளவில் முடுக்கி விடப்படல் வேண்டும். இவ்வகைக் கல்வி பனை சார் வாழ்வியலில் உள்ள மக்களுக்கு தமிழ்மொழி மூலம் சென்றடையக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

பனைவளஉற்பத்திகள் என்றைக்கு முழுமையாக உலக சந்தைக்கு செல்கின்றதோ அன்றைக்கு எமதுதேசத்தின் வளர்ச்சிக்கான வடகிழக்கின் அந்நிய செலாவாணி உயர்வு பெறும். தொழில் பெருகும். மக்கள் நலன்பெறுவர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 568





சின்னப் பழுவேட்டரையர் - காலனையும் கதிகலங்க அடிக்கக்கூடிய காலாந்தக கண்டர், என்னிடம் வரும்போது பயந்து நடுங்குகிறார். இந்தச் சோழ ராஜ்யத்தை ஏக சக்கராதிபதியாக ஆளவிரும்பும் மதுராந்தகத் தேவர் என்னிடம் வரும்போதும் பயபக்தியுடன் வருகிறார். யமலோகத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் சுந்தர சோழச் சக்கரவர்த்திகூட நான் அருகில் சென்றால் நடுங்குகிறார்.

ஒவ்வொரு தடவை அவர் என்னைக் கண்டு மூர்ச்சையே அடைந்து விடுகிறார். இன்றைக்கு வந்தானே பார்த்திபேந்திர பல்லவன்! அவனுடைய அஞ்சா நெஞ்சத்தையும், வீரத்தைப் பற்றியும் வெகு வாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆதித்த கரிகாலரின் உயிர்த்தோழன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் என் அருகில் வந்த அரை நாழிகைக்கெல்லாம் அவன் எப்படி அடங்கி ஒடுங்கிப் போய்விட்டான்! ஆதித்தகரிகாலரிடம் உடனே போக வேண்டிய கடமையையும் மறந்து, என்னைத் தொடர்ந்து வருகிறான். நான் காலால் இட்ட பணியைத் தலையால் நிறைவேற்றி வைக்க ஆயத்தமாயிருக்கிறான்.

அதே சமயத்தில் என்னருகில் நெருங்கும்போது அவன் நடுங்குகிறான். அதைப் பார்க்கும்போது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. சிறு குழந்தையாயிருந்த போது எரியும் நெருப்பைக் காண எனக்கு ஆசையாயிருக்கும். நெருப்பின் அருகில் செல்வேன். தீயின் கொழுந்தைத் தொடுவதற்கு ஆசையுடன் கை விரலை நீட்டுவேன். ஆனால் அதற்குத் தைரியம் வராது. சட்டென்று விரலை எடுத்துக்கொண்டு விடுவேன். இம்மாதிரி எத்தனையோ தடவை செய்திருக்கிறேன். பார்த்திபேந்திரன் என் பக்கத்தில் நெருங்கி வருவதையும், பயந்து விலகுவதையும் பார்க்கும்போது அந்தப் பழைய ஞாபகம் எனக்கு வந்தது. பல்லவன் மட்டும் என்ன? நீர் யாருடைய தூதராக ஓலை எடுத்துக்கொண்டு காஞ்சியை விட்டுக் கிளம்பினீரோ, அந்த ஆதித்தகரிகாலரும் அப்படித்தான். நாங்கள் குழந்தைகளாயிருந்த நாளிலிருந்து அவருக்கு என்பேரில் அளவில்லாத வாஞ்சை கூடவே ஒரு பயம். அதனால் என் வாழ்க்கை எப்படியெல்லாம் மாறிவிட்டது! ஐயா! உமது எஜமானரை நீர் மறுபடியும் சந்திக்கும் போது எனக்காக ஒரு செய்தி சொல்வீரா? 'சென்றதையெல்லாம் நான் மறந்துவிட்டேன். நான் இப்போது அவருக்குப் பாட்டி உறவு பூண்ட பழுவூர் ராணி. என்னைப் பார்ப்பதற்குச் சிறிதும் பயப்பட வேண்டாம். அவரை நான் கடித்துத்தின்று விழுங்கிவிட மாட்டேன்!' என்று சொல்லுவீரா?"

"தேவி! நான் உயிரோடு திரும்பிப்போய் ஆதித்த கரிகாலரைப் பார்ப்பேன் என்பது நிச்சயமில்லை, அப்படிப் பார்த்தால் அவரிடம் நான் சொல்லுவதற்கு எத்தனையோ செய்திகள் இருக்கின்றன. தங்களுடைய செய்தியைச் சொல்லுவதாக என்னால் உறுதி கூற முடியாது. தயவு செய்து மன்னிக்க வேணும்!"

"ஆம்! நான் பார்த்திருப்பவர்களுக்குள்ளே நீர் ஒருவர்தான் தைரியசாலி. மனத்தில் உள்ளதை ஒளியாமல் பேசுகிறீர். ஆகையால்தான் உம்மை எனக்குப் பிடித்திருக்கிறது. வாணர்குல வீரரே! நான் அதிகபேரைப் பார்ப்பது கிடையாது. பழையாறை இளைய பிராட்டியைப் போல் ரதத்தில் ஏறிப் பிரயாணம் செய்வதில்லை. எங்கேயாவது போகவேண்டி நேர்ந்தால் மூடுபல்லக்கில் போகிறேன். எனக்கு யார் மூலமாகவாவது ஏதேனும் காரியம் ஆகவேண்டியிருந்தால் அவர்களை மட்டுந்தான் பார்க்கிறேன். அவர்கள் பெரும்பாலும் கோழைகளாயிருக்கிறார்கள். மனத்தில் உள்ளதைச் சொல்வதற்குத் துணிவதில்லை. நீர் மனத்தில் தோன்றுவதை ஒளிக்காமல் சொல்கிறீர்."

"ஒளிப்பதில் பயனில்லை என்று நான் அறிந்திருக்கிறேன், ராணி! தங்களுடைய கண்கள் ஊடுருவிச் சென்று அறிய முடியாத இரகசியம் எந்த மனிதனுடைய நெஞ்சிலும் இருக்க முடியாது!"

"அது உண்மையாக இருக்கலாம். ஆனால் உம்முடைய நெஞ்சில் உள்ளதைத்தான் நான் இன்னும் அறிந்து கொள்ள முடியவில்லை.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## பொருளின் அருமை தெரியாதவன்

(நேற்றைய தொடர்ச்சி...)

இப்படியாக வீரன் உழைக்காமல் உண்டு சுகமாக இருந்து வந்தான்.

பல மாதங்கள் சென்றன. கந்தர்வர்கள் புறப்படத் தயாரானார்கள்.

அப்பொழுது வீரனிடம், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டனர். அவன் அமுதசுரபி பாத்திரத்தை தருமாறு கேட்டான்.

"அதை உன்னால் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள இயலாது வேறு ஏதாவது தருகிறோம்" என்றனர்.

வீரன் பிடிவாதமாக, அதையே விரும்பிக் கேட்டான் அவர்களும் அவன் விருப்பப்படி அமுதசுரபி பாத்திரத்தை அவனுக்குக் கொடுத்து விட்டுச் சென்றனர்.

வீட்டுக்குத் திரும்பியவீரன் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தான். முன்போல் அவன் விறகு வெட்ட காட்டுக்குப் போகவில்லை.

"சில நாட்களாக வீரன் காட்டுக்குப் போகாமல், விறகு வெட்டி வராமல், சும்மா சுகமாக வாழ்கிறான்" என்று ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொண்டனர் அவனுடைய உறவினர்கள். அதோடு அக்கம் பக்கத்தில் உள்ளோரும் பேசலானார்கள்.

ஒரு நாள் வீரனிடமே அதைக் கேட்டு விட்டனர்.

வீரனுக்கு மகிழ்ச்சியும் மதிப்பும் அதிகரிக்கவே, சிறிது அதிகமாகவே மது அருந்தி ஆடிப் பாடத் தொடங்கினான். அதோடு கூட அமுத சுரபிப் பாத்திரத்தையும் தோளில் வைத்துக் கொண்டு, ஆடிப் பாடி குதித்தான். அமுத சுரபிப் பாத்திரம் கீழே விழுந்து நொறுங்கியது.

வீரன் மிகவருத்தமுற்றான். முன்போலவே காட்டுக்கு விறகு வெட்டி வரச் சென்றான்.

பொருளின் அருமை தெரியாதவனிடம் பொருள் தங்குவது இல்லை.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும். தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்சி சார்ந்த ஆதரவு சிறந்த தெரிவுக்குப் பங்கம்

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலையொட்டி வேட்பாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

அந்தவகையில் நேற்று முன்தினம் (26) தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளார்.

உண்மையில் தேர்தல் விஞ்ஞாபனம் என்பது பதவிக்கு வந்தால், நாம் எதைச் செய்வோம் என்பதை முன்கூட்டியே மக்களுக்குத் தெரியப்படுத்துகின்ற ஓர் எழுத்து மூலமான உத்தரவாதமாகும்.

இதை இன்னொருபடி மேற்சென்று கூறுவதாயின், ஒரு வேட்பாளர் வாக்காளர்களுடன் செய்து கொள்கின்ற உடன்படிக்கை எனலாம்.

அதாவது, நீங்கள் எனக்கு வாக்களித்து என்னை அதிகாரக் கதிரையில் இருத்தினால், நான் எதை எதை அமுல்படுத்துவேன் என்பதை உறுதி செய்வதாக அமைவதே தேர்தல் விஞ்ஞாபனமாகும்.

உண்மையில் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் எப்படியாக அமைந்துள்ளன என்பதைச் சீர்தூக்கி ஆராய்ந்து நாட்டுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை யார் அதிகம் முன்வைக்கின்றார்களோ அவர்களுக்கு வாக்களிப்பதுதான் உண்மையான ஜனநாயகம்.

ஆனால் நம் மக்கள் கட்சி சார்ந்து பிரிந்து நிற்கின்றனர். இவ்வாறு கட்சி சார்ந்து கன்னை பிரிந்து நிற்பதால், ஆற்றல்மிகு தலைவர்கள் ஆட்சிக்கு வரமுடியாமல் போகின்றது.

அதாவது நான், எனது தந்தை, தந்தையின் தந்தை எனப் பரம்பரையாக ஆதரித்து வந்த கட்சிக்கே எங்கள் வாக்கு என்ற நிலைமை இருக்கும்போது, ஏனைய கட்சிகளால் – ஏனைய வேட்பாளர்களால் முன்வைக்கப்படுகின்ற தேர்தல் விஞ்ஞாபனம் பற்றி சீர்தூக்கி ஆராய்கின்ற சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது.

ஆக, காலாகாலமாக நாம் ஆதரித்து வந்த கட்சியைத் தொடர்ந்தும் ஆதரிப்பதுதான் நம் மரபு என்பதான நிலைமை இருக்கும்போது, குறித்த கட்சி ஊழல் மோசடியில் ஈடுபட்டாலும் அதனை நாம் ஏற்க மறுத்து, வாக்களிக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை நம் நாட்டில் பெருந்துயராக நீடித்து வருகிறது.

எனவே அன்புக்குரிய வாக்காளர்கள் கட்சிச் சார்பு என்பதை அடியோடு கைவிட வேண்டும்.

கட்சிச் சார்பு எப்போதும் சிறந்த தெரிவுக்கு பங்கமாக அமையும்.

ஆகையால் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலிலேனும் வேட்பாளர்கள் முன்வைக்கின்ற தேர்தல் விஞ்ஞாபனங்களை படித்தறிந்து, அதன் அடிப்படையில் யாருக்கு வாக்களிப்பது என்ற தீர்மானத்தைப் பொது மக்கள் எடுத்தாக வேண்டும்.

அதேநேரம் குறித்த தேர்தல் விஞ்ஞாபனங்களை சம்பந்தப்பட்டவர்கள் அமுல்படுத்துவார்களா? அத்தகு செயற்திறன் அவர்களிடம் உண்டா? முன்னைய தேர்தல்களின் போது முன்வைத்த விஞ்ஞாபனங்கள் நிறைவேற்றப்பட்டனவா? என்றெல்லாம் ஆராய்வது வாக்காளப் பெருமக்களின் தார்மீகக் கடமையாகும்.

# கட்சி பேதங்களை மறந்து நாட்டை முன்னேற்ற வாருங்கள்

## ஜனாதிபதி ரணில் அழைப்பு

கட்சி பேதங்களை களைந்து நாட்டை முன்னோக்கிகொண்டு செல்வதற்கு ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இயலும் ஸ்ரீலங்கா மாபெரும் வெற்றிப் பேரணி மாவனெல்லை நகரில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

கடந்த 2 வருடங்களாக இந்த நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டது. ஜே.ஆர் ஜயவர்தன மற்றும் ரணசிங்க பிரேமதாச போன்றவர்கள் இந்த நாட்டின் அபிவிருத்திக்கு சிறந்த முன்மாதிரிகள். நெருக்கடியில் வீழ்ச்சியடையாமல் நாட்டைப் பாதுகாத்தவர்கள்.

எனவே ஜே.ஆர் ஜயவர்தன மற்றும் ரணசிங்க பிரேமதாச ஆகியோரின் வழிமுறைகளைப் பின்பற்றுவோம் நாடு தொடர்பாக சிந்தித்து தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

இன்று இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்தவர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்தவர்கள், பொதுஜன பெரமுனவை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டுள்ளனர். நாடு தொடர்பாக சிந்தித்தே எம்முடன் இணைந்துள்ளனர்.

நாடு வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்தில் நான் கட்சி பேதமின்றி சிந்தித்ததாலேயே நாட்டை மீட்டெடுக்க முடிந்தது. நாடு நெருக்கடியை எதிர்கொண்ட போது நாட்டை பொறுப்பேற்றிருக்க வேண்டிய எதிர்க்கட்சி தலைவர் ஓடிவிட்டார்.

நாட்டில் நாளாந்தம் ஆங்காங்கே எரிவாயு, எரிபொருள் வரிசைகள் அதிகரித்தன. மக்கள் மயங்கி வீழ்ந்து உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகின. நெருக்கடியில் இருந்து மக்களை விடுவிப்பதற்காகவே நான் நாட்டைப் பொறுப்பேற்றேன்.

இன்று நாடு சுமூகநிலையை அடைந்துள்ளது. முழுமையாகப் பொருளாதார ஸ்திரத்தன்மை அடைவதற்கான இலக்கு நோக்கிப் பயணிக்கின்றோம். கட்சி பேதங்களைக் களைந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம். எதிர்காலத்தினைச் சிந்தித்து 21 ஆம் திகதி மக்கள் வாக்களிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ம-7)

## யாழ். இந்துக் கல்லூரியில் கலாசார விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் வாரத்தை முன்னிட்டுக் கலாசார விழா இன்று புதன்கிழமை காலை-08 மணி முதல் மேற்படி கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சமஸ்கிருதத் துறைத் தலைவர் கலாநிதி. மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். நிகழ்வில் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ம-7)

## கச்சதீவு அருகே இந்திய மீன்பிடிப் படகு விபத்து

### இரு கடற்றொழிலாளர்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கே கச்சதீவில் இருந்து சுமார் 8 கடல் மைல் தொலைவில் விபத்துக்குள்ளான இந்தியப் படகிலிருந்து 2 கடற்றொழிலாளர்களை இலங்கை கடற்படையினர் நேற்று மீட்டுள்ளனர்.

கச்சதீவுப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் நேற்று காலை நீந்திக் கரைக்கு வந்த ஒருவரை அவதானித்துள்ளனர்.

குறித்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட கடற்படையினர், நான்கு கடற்றொழிலாளர்களுடன் வந்த தமது கப்பல், கடல் சீற்றத்தால் கவிழ்ந்ததாகவும், தான் நீந்தி கச்சதீவில் கரை ஒதுங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து விரைவாக செயற்பட்ட [illegible] இலங்கை கடற்பரப்பில் இந்திய கடற்றொழிலாளர்களை தேடுதல் மற்றும் மீட்பு பணியை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் போது, கடற்படையினர் மற்றொரு இந்திய கடற்றொழிலாளரை நீர் புதைகுழியில் இருந்து வெற்றிகரமாக மீட்டனர்.

கடற்படையினரால் மீட்கப்பட்ட இரண்டு கடற்றொழிலாளர்களும் நலமுடன் இருப்பதாகவும், அவர்களை இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கச்சதீவு கடற்பகுதியில் கடல் நிலைமை சவாலான போதிலும், எஞ்சிய இரண்டு இந்திய கடற்றொழிலாளர்களை தேடும் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் கடற்படை [illegible] ஈடுபட்டுவருகிறது. (ம-7)

## கற்பிட்டியைச் சேர்ந்தவர் நாகர் கோவிலில் மரணம்

(கரணவாய்)

நாகர்கோவில் பகுதியில் தங்கி நின்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளி ஒருவர் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது உடல் நலக்குறைவால் உயிரிழந்துள்ளார்.

கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த முகமட் றஸ்லான் (வயது- 21) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி இளைஞர் நாகர்கோவில் பகுதியில் தங்கி நின்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதாகவும் நேற்று செவ்வாய்க்கிழமை(27) காலை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது உடல்நலக்குறைவு ஏற்பட்டதன் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்ற போது அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பதற்காக போக்குவரத்து வசதி

(கொழும்பு)

விசேட தேவையுடையவர்களுக்கு, ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு விசேட போக்குவரத்து வசதிகள் வழங்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த போக்குவரத்து வசதிகளைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது உதவித் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் விசேட தேவையுடையவர்களாக இருப்பின், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும்விசேட தேவையுடையவர்களுக்கான தற்காலிக அடையாள அட்டையைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் அவசியமில்லை எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு



மலர்வு
01 . 12 . 1949

உதிர்வு
28 . 07 . 2024

## அமரர். பழனிப்பிள்ளை சிவன்செயல்

(ராசா – கந்தரோடை)

(ராஜன் ஒலி, ஒளி, சமுத்திர மஹால், Euro power lanka Pvt LTD-உரிமையாளர்)

**இடம் : சமுத்திர மஹால், மருதனார்மடம்**

**திகதி : 01.09.2024 (ஞாயிற்றுக்கிழமை)**

**நேரம் : முற்பகல் 11 மணி தொடக்கம் 3.00 மணி வரை**

எனது தந்தையின் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் அவரின் நண்பர்கள், அவரிடம் தொழில் பழகியவர்கள், அவரை அறிந்தவர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

சமுத்திர மஹால்,
மருதனார்மடம்.

தகவல்:
மகன்- 077 652 9583

(291)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில்...

சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 4 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மன்னார்- மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம் பகுதியில் நேர் எதிரே வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பட்டா ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிள் மற்றும் பட்டா வாகனத்தில் பயணித்தவர்களே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்களில் மன்னார்ப்பகுதியை சேர்ந்த இருவரும் மாந்தை மேற்குப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குவதாகத் தெரிய வருகிறது.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை உயிலங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)

## கிளிநொச்சியில்...

விபத்தில் கனகாம்பிகைக்குளம் பகுதியைச் சேர்ந்த அருள்நேசன் அருள்வதனன் (வயது-45) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

155ஆம் கட்டைச் சந்தியில் ஆட்களை ஏற்றுவதற்காக குறுந்தூரப் பேருந்துத் தரிப்பிடத்தில் பேருந்து நிறுத்தப்பட்டிருந்த நிலையில், கிளிநொச்சிப் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் பேருந்தை முந்திப் பயணித்துள்ளது.

இந்நிலையில் அதே திசையில் பயணித்த பார ஊர்தி குறித்த மோட்டார் சைக்கிளை மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பார ஊர்தியின் சாரதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதுடன், விபத்துத் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## வான் மோதி...

ஒன்று மோதிவிட்டுச் சென்றுள்ளது.

இதில் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் மீண்டும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## தீக்காயத்துக்...

குறித்த குடும்பப் பெண் கடந்த 25ஆம் திகதி தீயில் எரிந்த நிலையில் அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## நடைபெறவுள்ள...

என ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவினர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் உள்ளிட்ட தரப்பினர் நேற்றுக் காலை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு அலரி மாளிகையில் நடைபெற்றிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்கு அரசாங்கம் வழங்கும் ஆதரவிற்கும் இதன்போது நன்றி தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் நாட்டின் பொருளாதார நிலைமைகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் இதன்போது விசேடமாகக் கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறிப்பாக ஜனநாயக விழுமியங்கள் மற்றும் அதன் சீர்திருத்தங்களுடன் கூடிய முன்னேற்றத்தில் நாடு தொடர்ந்து பயணிப்பதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தல் சிறந்த வழியை ஏற்படுத்தும் என்றும் தூதுக்குழுவினர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தனர். (ம-7)

## வடக்குக்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளக்கமளித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள இலங்கை ராமன்ய மகா பீடத்தின் தலைமையகத்திற்கு நேற்றுக் காலை விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, வடக்குக் கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் முன்னெடுத்திருந்த கலந்துரையாடல் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

ராமன்ய மகா பீடத்தின் பீடாதிபதி அக்கமஹா பண்டித விமல மகாநாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினரைச் சந்தித்து ஜனாதிபதி ஆசிகளையும் பெற்றுக்கொண்டார்.

இதன்போது மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியின் எதிர்காலப் பணிகளுக்கு தமது ஆசிகளைத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி தனது தேர்தல் பணிகளை ஆரம்பித்த பின்னர், நேற்றுக் காலை மகா சங்கத்தினரை சந்தித்துள்ளார்.

மகா சங்கத்தினருடன் சிறிது நேரம் கலந்துரையாடிய ஜனாதிபதி, நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து மகா சங்கத்தினருக்கு தெளிவுபடுத்தினார்.

அத்துடன், பிரிவெனாக் கல்வி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள், புனித பூமி சார்ந்த காணிப் பிரச்சினைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டதுடன், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பில் தமிழ் எம்.பிக்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்கள் குறித்தும் ஜனாதிபதி. மகாநாயக்க தேரருக்கு விளக்கமளித்துள்ளார்.(ம-7)

## எமது...

அத்துடன், நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கும் உள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் எனவும் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 18ஆவது வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து அரசாங்கம் இனவாதத்தைத் தோற்றுவித்தபோது ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாமே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோம்.

கொரோனாக் காலத்தில் ஜனாஸாக்களை எரிப்பதா? புதைப்பதா? என்கின்ற பிரச்சினை தோன்றிய போது முஸ்லிம் மக்களுடைய நல்லடக்கத்திற்கான உரிமைக்காக ஐக்கிய மக்கள் சக்தி முன்நின்றது.

உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைக்கமைய நல்லடக்கம் செய்ய முடியும் என்ற நிலைப்பாடு வந்தபோது நாமும் எமது உறுப்பினர்களும் அதற்கு ஆதரவாக இருந்தோம். இனவாதத்தையும் மதவாதத்தையும் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு அரசாங்கம் செயற்பட்டது என்றார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2024.08.27
சீட்டிழுப்பு இலக்கம் 5578
D 8 3 5 3 0 8
அத சம்பத D 5 3 0 8
சீட்டிழுப்பு இலக்கம் 153
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1608
K 37 59 72 73 K
Double Chance 50451

மெகா பவர்
திகதி 27/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1926
E 14 11 33 47 67
Double Chance 22655

லக்கி 7 VIP
திகதி 2024.08.27
சீட்டிழுப்பு இலக்கம் 0404
R 7 9 9 2 9 4 R

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3820
சீட்டிழுப்பு திகதி 27.08.2024
J 01 36 75 79
J 38995

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.27
சீட்டிழுப்பு இலக்கம் 0887
மேஷம் 06 27 40 53 மேஷம்
45433 03

உத்தியோகபூர்வ முடிவுகள்
27.08.2024 வெற்றி வாரம் 286 வர்ணம் சிவப்பு
Y 7 8 2 4 1 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,869,508.00
62809
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2552 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 27.08.2024 தினம் செவ்வாய்
50 51 64 68 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,295,972.00

சனிதா
திகதி 2024.08.27 வெற்றி வாரம் 4713 வர்ணம் பச்சை
23 35 36 53 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,116,291.20
05344

சசிரி
வெற்றி வாரம் 521
சீட்டிழுப்பு திகதி 2024.08.27
31 33 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,997,000/-

ரசி
சீட்டிழுப்பு வாரம் 4264 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.08.27 தினம் செவ்வாய்க்கிழமை
39 50 54 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,275,728.80
147768

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 25 11 29 68 75
1728
27.08.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 541,412,150.60

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2378
சீட்டிழுப்பு திகதி 2024.08.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,068,366.40
20 49 63 72 R
958922
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டையும் மக்களையும் புலிகளிடமிருந்து பாதுகாத்தவர்கள் இராணுவத்தினரே

## நாம் ஒருபோதும் அவர்களை கைவிடோம் – நாமல்

(கொழும்பு)

நாட்டு மக்களை பாதுகாத்த இராணுவத்தினர் மீது யுத்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எமது ஆட்சியில் இராணுவத்தினரை பாதுகாப்போம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்தகால ஆட்சியாளர்கள் இராணுவத்தை கேலிக்கூத்தாக்கினார்கள். விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை பாதுகாத்த இராணுவத்தினர் குற்றவாளிகளாக்கப்பட்டார்கள். சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

உலக நாடுகளில் தற்போது இடம்பெறும் போரினால் சிவில் பிரஜைகள் கொல்லப்படுகிறார்கள். இதனை பற்றி எந்த நாடும் பேசுவதில்லை. நாங்கள் மனிதாபிமான கண்காணிப்புக்களை முன்னெடுத்தோம். தமிழர்களை பாதுகாத்த இராணுவத்தினர் மீது யுத்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எமது அரசாங்கத்தின் இராணுவத்தினரின் கௌரவத்தை பாதுகாப்போம். இராணுவத்தினர் இந்த நாட்டுக்கு செய்த சேவையை நாங்கள் நன்கு அறிவோம்.

ஆகவே அவர்களுக்கான புதிய நலன்புரித் திட்டங்களை முன்னெடுப்போம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு தரப்பினரது தவறான ஆலோசனைகளுக்கமைய விவசாயத் துறையில் முன்னெடுத்த தவறான தீர்மானத்தால் இரண்டு போக விவசாய நடவடிக்கை பாதிக்கப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விவசாய கொள்கையையே நான் செயற்படுத்துவேன்.

இறக்குமதி செய்து உணவளிக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. தேசிய உற்பத்திகளை சகல வழிகளிலும் மேம்படுத்த விசேட கொள்கைத் திட்டங்களை செயற்படுத்துவோம் என்றார். (ம-7)

## கடன் மறுசீரமைப்புக்கென ரூ. 200 மில்லியன் வழங்க உலக வங்கி உடன்பாடு

அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக சுமார் 200 மில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

குறித்த நிதிவசதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய உலக வங்கிக் குழுமத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான இணை நிறுவனத்துடன் குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார். (ம-7)



## உரமானியத்தை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம்

நெற்செய்கைக்கு உரம் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்படும் மானியத் தொகையை அடுத்த போகத்திலிருந்து அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங் கியுள்ளது.

அதன்படி, ஒரு ஹெக்டேயரு க்கு வழங்கப்படும் 15,000 ரூபா யாக இருந்த உரமானியம் 25,000 ரூபாயாக அதிகரிக்கப்பட உள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ம)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1065) 076 825 7716 (ஆகாஸ்)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1064)


காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 172 நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna கல்லூரி 1 Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி 500m தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150,000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

077 294 1521
077 288 0152
076 755 8606
(1793)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 28 - 07 - 1974

மறைவு 26 - 08 - 2024

## அமரர் பத்மநாதன் ஐங்கரன்

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வாரிவளவு, காரைநகர்)

காரைநகரின் அபிவிருத்தியில் அக்கறையுடன் செயற்பட்டு, சிறந்த சமூகத் தொண்டராக எல்லோரையும் அரவணைத்துப் பணியாற்றிய நல்ல உள்ளம், நல்ல நண்பர் ப.ஐங்கரனின் திடீர் மறைவு எம்மை எல்லாம் ஆழாத் துயரத்தில் மூழ்கடித்துவிட்டது.

அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விக்காருண்யன்
எயன் கலாநிதி, E.S.P. நாகரத்தினமும்
காரைநகர் வாரிவளவு நண்பர்களும்
(C 1067)

இந்தியன் விசா சேவைகள்
ஒரு வருட E-Visa இப்போது 9990/= ரூபாவிலிருந்து
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ் CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்) (293)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1064)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
075 033 6759
(216)

வங்கி மீதி வசதி (Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(289)

வேலைவாய்ப்பு
உரும்பிராயில் அமைந்துள்ள சுப்பர்மாக்கட் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.
- கடை வேலை : பொருட்கள் கட்டிக் கொடுப்பதற்கு ஆண்/ பெண் - வயதெல்லை : (20-30)
- கூலி(நாட்டாமை) : ஆண் (வயது : 35 - 45)
- Seourity : பாதுகாவலர் : வயது (40-60)
[illegible] சுப்பர்மாக்கட் - உரும்பிராய் - 077 773 0900
(293)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.